பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

13 10 2026 TUESDAY 06 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, புதுதில்லியில் Bloomberg பொருளாதார மன்றக் கூட்டத்தில் இன்று உரையாற்றுகிறார்.

2. தமிழகத்தின் பொறுப்பு ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், மாநிலத்தின் முழுநேர ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

3. மருத்துவ பணியாளர்களின் கோரிக்கைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு அருண்ராஜ் கூறியுள்ளார்.

4. தஞ்சாவூர், கன்னியாகுமரி உள்ளிட்ட 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

>>>>><<<<<

பிரதமர் திரு நரேந்திர மோடி, புதுதில்லியில் நடைபெறும் Bloomberg பொருளாதார மன்றக் கூட்டத்தில் இன்று உரையாற்றுகிறார்.

3 நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தில், சர்வதேச பொருளாதார மற்றும் வர்த்தக சூழல்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

இந்த மாநாட்டின் பல்வேறு அமர்வுகளில் 9 நாடுகளைச் சேர்ந்த அரசு பிரதிநிதிகள், மூத்த மத்திய அமைச்சர்கள் 6 பேர் மற்றும் முன்னணி தொழில்துறை பிரதிநிதிகள் உரையாற்றவுள்ளனர்.

உலகின் முன்னணி நிறுவனங்களைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட தலைமைச் செயல் அதிகாரிகள் இதில் கலந்து கொள்கின்றனர்

>>>>><<<<<

ஆறு மாநிலங்களுக்கு ஆளுநர்களை நியமித்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி, கேரள மாநில ஆளுநரும் தமிழகத்தின் பொறுப்பு ஆளுநருமான திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், தமிழகத்தின் முழு நேர ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிக்கிம் மாநில ஆளுநர் திரு ஓம் பிரகாஷ் மாத்தூர், கேரள மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று, திரு பிரஜ் மோகன் ராம், ஒடிசா ஆளுநராகவும், டாக்டர் சுதா யாதவ் கர்நாடக ஆளுநராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

உத்தரகண்ட் ஆளுநராக திரு தால் சிங் பெசேனும், சிக்கிம் ஆளுநராக திரு துஷ்யந்த் கௌதமும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே, தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகருக்கு முதலமைச்சர் திரு விஜய் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்

>>>>><<<<<

முதலமைச்சர் திரு. விஜய் இன்று ஆந்திரா செல்கிறார்.

விஜயவாடாவில் அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடுவை அவர் சந்தித்து பேசவுள்ளார்.

தென்மாநில நதிகள் இணைப்பு, கிருஷ்ணா நதிநீர் விவகாரம் உள்ளிட்டவை குறித்து இருவரும் ஆலோசனை நடத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆந்திர துணை முதலமைச்சர் திரு. பவன் கல்யாணையும் திரு. விஜய் சந்தித்து பேசவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<

மத்திய - மாநில அரசுகள் இணக்கமாக செயல்பட வேண்டும் என்பதே தமிழக அரசின் நிலைப்பாடு என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நலனை காக்கவும், வளர்ச்சித் திட்டங்களை விரைந்து செயல்படுத்தவும் மத்திய - மாநில அரசுகளுக்கு இடையே ஒத்துழைப்பு அவசியம் என்று கூறினார்.

தமிழகத்தில் மக்களுக்குத் தேவையான திட்டங்களை வாக்குறுதிகளாக தேர்தல் அறிக்கையில் அளித்து, அதனை த.வெ.க. அரசு படிப்படியாக நிறைவேற்றி வருவதாக திரு. செங்கோட்டையன் தெரிவித்தார்.

>>>>><<<<<

சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவப் பணியாளர்களின் கோரிக்கைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண மாநில அரசு முன்வர வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உண்ணாவிரதத்தில் ஈடுபடவிருந்த பணியாளர்கள் கைது செய்யப்பட்டது கடும் கண்டனத்திற்குரியது என்று தெரிவித்துள்ளார்.

ஐந்தாண்டுகளுக்கும் மேலாக மருத்துவப் பணியாளர்களை பணிநிரந்தரம் செய்யாமல் இருப்பது ஏற்புடையதல்ல என்றும் திரு. சண்முகம் கூறியுள்ளார்.

>>>>><<<<<

மருத்துவ பணியாளர்களின் கோரிக்கைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு அருண்ராஜ் கூறியுள்ளார்.

சென்னையில் மருத்துவப் பணியாளர்கள் சங்க பிரதிநிகளை சந்தித்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் நவம்பர் மாதம் 10-ம் தேதி பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றார்.

(வாய்ஸ் பைட் – அருண்ராஜ் 25 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் மீண்டும் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் குற்றச் சம்பவங்களும், போதைப் பொருள் புழக்கமும் அதிகரித்து வருவதாக கூறினார்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற த.வெ.க அரசு தவறிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தலைமைச்செயலகத்திலேயே மின்வெட்டு ஏற்படும் அளவுக்கு நிர்வாகம் சீர்குலைந்துள்ளதாக திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டினார்.

>>>>><<<<<

வடலூர் வள்ளலார் சத்ய ஞான சபையின் நிலத்தை ஆக்கிரமித்துள்ள 269 பேருக்கு நோட்டீஸ் அனுப்பும் நடைமுறை தொடங்கியுள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை தெரிவித்துள்ளது.

30 ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டதாக தொடரப்பட்ட வழக்கு, சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் திரு. ஜெயச்சந்திரன், திரு. மனோகரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்த போது, அரசு சார்பில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது.

>>>>><<<<<

தமிழகத்தில் அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விலை உயர்வால் ஏழை எளிய மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய உணவு அமைச்சர், இது பண்டிகை காலங்களில் ஏற்படும் வழக்கமான விலை உயர்வு என்று கூறுவது கண்டனத்திற்குரியது என அவர் கூறியுள்ளார்.

இதுபோன்ற திசை திருப்பும் கருத்துக்களை தவிர்த்து, உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று திரு. டி.டி.வி. தினகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்துவது குறித்து, மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. வெங்கடரமணன் தலைமையில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

சென்னையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அத்தியாவசிய பொருட்களின் விலையை தினசரி அடிப்படையில் கண்காணிப்பது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விலை உயர்வு ஏற்படும்போது அதனை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

பள்ளிக்கரணை சதுப்புநில சுற்றுச்சுவர் திட்த்தை தமிழக அரசு கைவிட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் இந்த தடுப்புச் சுவரால் சென்னை நகருக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படும் என்று கூறினார்.

இப்பகுதியில் 3 கிலோமீட்டர் தொலைவுக்கு 6 அடி உயர சுற்றுச்சுவரும், இரண்டு கிலோமீட்டர் நீளத்திற்கு நடைபாதையும் அமைக்கும் பணி முந்தைய திமுக ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்டதை சுட்டிக்காட்டிய அவர், அதே தவறை தொடராமல் இத்திட்டத்தை த.வெ.க. அரசு கைவிட வேண்டும் என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தஞ்சாவூர், புதுக்கோட்டை, கன்னியாகுமரி உள்ளிட்ட 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கபட்டுள்ளது.

வட உள்தமிழகத்தின் ஒரு சில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பைவிட 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

எஸ்டோனியா நாட்டின் புதிய அதிபராக திருமதி ULLE MADISE நேற்று பதிவியேற்றுக் கொண்டார்.

>>>>><<<<<

இந்தியா - ரஷ்யா இடையேயான கூட்டு கடல்சார் பயிற்சி, ரஷ்யாவின் Vladivostok-ல் இன்று தொடங்கி வரும் 18-ம் தேதி வரை நடைபெறுகிறது.

>>>>><<<<<

சர்வதேச புலிகள் கூட்டமைப்புக்கான புதிய அலுவலக கட்டடத்தை மத்திய சுற்றுச் சூழல் துறை அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் நேற்று புதுதில்லியில் திறந்து வைத்தார்.

>>>>><<<<<

ஈரான் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் திரு மொஹ்சென் ரெசாய், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவலுடன் நேற்று தொலைபேசி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

>>>>><<<<<

கோவாவில் நவம்பர் மாதம் 20-ம் தேதி தொடங்கும் இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்கும் ஊடகவியலாளர்கள் அங்கீகார அட்டையை பெறலாம் வரும் 15-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

சென்னை புரசைவாக்கம் பகுதியில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சிக்கு மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன் தலைமை வகித்தார்.

>>>>><<<<<

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை, மாநில தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு முகமது பர்வேஸ் வழங்கினார்.

>>>>><<<<<

தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறையில் மேம்படுத்தப்பட்ட நாகக்குளம் நடைபாதை மற்றும் பூங்காவை மாநில அமைச்சர்கள் திரு ஷாஜகான் மற்றும் திரு வினோத் திறந்து வைத்தனர்.

>>>>><<<<<

சென்னை பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கைப் பணிகள்

தொடர்பாக மாநில அமைச்சர் திரு. விக்னேஷ் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

>>>>><<<<<

தசரா திருவிழாவை முன்னிட்டு குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோவிலில் வரும் 21-ம் தேதி வரை கட்டண தரிசனம் ரத்து செய்யப்படுவதாக இந்து சமய அறநிலையத்துறை அறிவித்துள்ளது.

>>>>><<<<<

சென்னையில் நேற்று நடைபெற்ற விலங்குகளைக் கையாளுபவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில், நாய் கட்டுப்பாட்டு மைய பணியாளர்கள் 168 பேருக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

வரும் 18ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து, தன்வி சர்மா, லக்ஷயா சென் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி 1-0 என்ற கோல்கணக்கில் மோஹன் பகான் அணியை வென்றது.

>>>>>END<<<<<